முழுப் பதிப்புரிமையுடையது

aat SRI LANKA

# இலங்கைக் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## இறுதிப் பரீட்சை – 2012 ஜனவரி

## (59) முகாமைத்துவக் கணக்கீடு மற்றும் வியாபார நிதியியல்

(Management Accounting & Business Finance)

21-01-2012
பிற்பகல்
[2.00 – 5.00]

**நேரம்: மூன்று (03) மணித்தியாலம்**

பக்கங்களின் எண்ணிக்கை: 08
வினாக்களின் எண்ணிக்கை : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்**

*(1) இவ்வினாத்தாள் **A, B** எனும் இரண்டு (02) பகுதிகளைக் கொண்டது.*

*(2) **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதப்படல் வேண்டும்.***

*(3) **விடைகள்** யாவும் உமக்கு வழங்கப்பட்டுள்ள **விடைப்புத்தகத்தில்** நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே **ஒரு மொழியிலேயே** எழுதப்பட வேண்டும்.*

*(4) கணிப்பான்கள் பயன்படுத்துதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

*(5) சகல செயன்முறைகளையும் கணிப்புகளையும் **சமர்ப்பிக்குக**. உங்களால் மேற்கொள்ளப்பட்ட **எடுகோள்கள்** ஏதுமிருப்பின் தெளிவாகக் **குறிப்பிடுக.***

*(6) மொத்தம் 100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### முகாமைத்துவக் கணக்கியல் (75 புள்ளிகள்)

Management Accounting

**01.** (A) மேந்தலைக் கிரய உறிஞ்சலிலிருந்து (Absorption of Overhead Cost) மேந்தலைக் கிரயப் பங்கீட்டை (Apportionment of Overhead Cost) வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(B) **ABC PLC** நிறுவனம் முறையே **P, Q** மூலப்பொருட்களைப் பயன்படுத்தி **A, B** உற்பத்திகளைத் தயாரிக்கிறது. உற்பத்திகள் **A, B** இனது நேர்க்கிரயங்கள் 2011 மார்ச் மாதத்தில் பின்வருமாறு உள்ளன.

**உற்பத்தி A**

| | Rs. |
|---|---|
| மூலப்பொருள் **P** (5 மீற்றர்கள்) | 250 |
| உழைப்பு (3 மணித்தியாலம்) | 75 |
| மாறும் மேந்தலைகள் (Variable overhead) | 75 |
| **மொத்தம்** | **400** |

**உற்பத்தி B**

| | Rs. |
|---|---|
| மூலப்பொருள் **Q** (3 மீற்றர்) | 150 |
| உழைப்பு (4 மணித்தியாலம்) | 100 |
| மாறும் மேந்தலைகள் (Variable overhead) | 50 |
| **மொத்தம்** | **300** |

2011 மார்ச் மாதத்திற்கான உற்பத்தி மேந்தலை ரூபா.511,500/- ஆகவும் மேந்தலைகளின் விபரங்கள் பின்வருமாறும் உள்ளன.

| | ரூபா. |
|---|---|
| மின்சாரம் | 115,500 |
| நீர் | 15,000 |
| தேய்மானம் | 93,000 |
| இயந்திராதிகளின் காப்புறுதி | 46,500 |
| நிர்வாக அலுவலர்களின் சம்பளங்கள் | 230,000 |
| அலுவலர் நலன்புரி | 11,500 |
| **மொத்தம்** | **511,500** |

கம்பனிகளின் ஏடுகளிலிருந்து பெயர்த்தெடுத்த 2011 மார்ச் மாதத்திற்கான பின்வரும் மேலதிக தகவல்கள் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

| **விபரம்** | **உற்பத்தி பிரிவு A** | **உற்பத்தி பிரிவு B** | **சேவைக் கிரய நிலையம் 1** | **சேவைக் கிரய நிலையம் 2** |
|---|---|---|---|---|
| நேரில் ஊழியர்களின் எண்ணிக்கை | 10 | 5 | 4 | 4 |
| இயந்திரத்தின் பெறுமதி (ரூ.) | 2,250,000 | 1,750,000 | 500,000 | 150,000 |
| நீர்ப் பாவனை (ரூ.) | - | - | 15,000 | - |
| மின்சாரம் (Kw) | 150 | 90 | 120 | 25 |

நிலையம் 1 இனது மேந்தலைச் சேவைக் கிரயமானது (overhead cost of service centre 1) முறையே உற்பத்திப் பிரிவுகள் **A** மற்றும் **B** என்பவற்றிற்கிடையே 3 : 2 என்ற விகிதத்தில் பங்கீடு செய்யப்படல் வேண்டும். நிலையம் 2 இனது மேந்தலைச் சேவைக் கிரயமானது, உற்பத்திப் பிரிவுகளுக்கிடையே சமமாக பங்கீடு செய்யப்படல் வேண்டும்.

2011 மார்ச் மாதத்தில் கம்பனியானது உற்பத்தி **A** இல் 1,500 அலகுகளையும் உற்பத்தி **B** இல் 1,200 அலகுகளையும் தயாரித்திருந்தது.

**பின்வருவனவற்றைக் கணிக்கும்படி நீங்கள் கேட்கப்படுகிறீர்கள்.**

(a) உற்பத்தி **A** மற்றும் **B** ஆகியவற்றிற்கான மொத்த அலகுக் கிரயம் (08 புள்ளிகள்)

(b) கம்பனியின் விலையிடல் கொள்கையானது தனது உற்பத்திகளின் விற்பனை விலையின்மீது 25% இலாபத்தை (margin) வைக்கிறதாக இருப்பின், உற்பத்தி **B** இனது விற்பனை விலையைக் கணிக்குக.

(02 புள்ளிகள்)
(மொத்தம் 14 புள்ளிகள்)

**02.** (A) பின்வரும் பதங்களைச் சுருக்கமாக விளக்குக.

(a) ஆழ்ந்த கிரயம் (Sunk Cost)

(b) ஒப்படைக்கப்பட்ட கிரயம் (Committed Cost)

(c) எண்ணநிலைக் கிரயம் (Notional Cost) (03 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட P நிறுவனம்** உற்பத்தி **A** ஐத் தயாரித்து விற்பனை செய்கிறது. உற்பத்தி **A** இனது அலகுக் கிரயம் மற்றும் விற்பனை விலை என்பன பின்வருமாறு,

| | **ரூ.** | **ரூ.** |
|---|---|---|
| விற்பனை விலை | | 160 |
| நேர் மூலப்பொருட்கள் (கி.கி. ரூ.5/- வீதம்) | 35 | |
| நேரடி உழைப்பு (மணித்தியாலத்திற்கு ரூ.9/- வீதம்) | 45 | |
| மாறும் மேந்தலை | 10 | |
| நிலையான மேந்தலை | 40 | |

ஆண்டொன்றிற்கான நிலையான மேந்தலைக் கிரயம் ரூ.700,000/- 2011 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் வரையறுக்கப்பட்ட **P** நிறுவனம் 17,500 அலகுகளைத் தயாரித்து விற்பனை செய்தது.

**பின்வருவனவற்றைக் கணிக்கும்படி நீங்கள் கேட்கப்படுகிறீர்கள்.**

(a) அலகுகளில் சமப்பாட்டு விற்பனைகள் (Break-even sales in units) (02 புள்ளிகள்)

(b) அலகுகளில் பாதுகாப்பு எல்லை (Margin of safety in units) (02 புள்ளிகள்)

(c) பங்களிப்பு விற்பனைகள் விகிதம் (contribution sales ratio) (01 புள்ளி)

(d) ரூ.700,000/- இலாபமொன்றை ஈட்டுவதற்கு உற்பத்தி **A** இன் அலகுகள் எத்தனை விற்கப்பட வேண்டும் ? (02 புள்ளிகள்)

(C) வரையறுக்கப்பட்ட **PQR** நிறுவனத்தின் முகாமைத்துவம் அடுத்த ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தினை கவனத்தில் கொள்கிறது. **P** எனும் உற்பத்தி ஒன்றின் பாதீடு செய்யப்பட்ட கிரயம் பின்வருமாறு,

| | **ரூ.** |
|---|---|
| நேரடிப் பொருட்கள் | 25 |
| நேரடி உழைப்பு | 12 |
| மாறும் மேந்தலை | 8 |
| நிலையான மேந்தலை | 6 |
| **மொத்தக் கிரயம்** | **51** |

அடுத்த ஆண்டில் வரையறுக்கப்பட்ட **PQR** நிறுவனம் 14,000 அலகுகளை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கிறது. மற்றொரு கம்பனியான வரையறுக்கப்பட்ட **ABC** நிறுவனம் அதே உற்பத்தியை உற்பத்தி செய்து அலகொன்று ரூ.45 வீத விலைக்கு வழங்கல் செய்ய ஒப்புக்கொண்டது. வரையறுக்கப்பட்ட **ABC** நிறுவனத்திடமிருந்து இவ்வுற்பத்தி கொள்வனவு செய்யப்பட்டால், வரையறுக்கப்பட்ட **PQR** நிறுவனம் தொழிற்சாலை வளவை (factory premises) வேறொரு கம்பனிக்கு ஆண்டொன்றுக்கு ரூ.140,000/- என்ற வீதப்படி வாடகைக்குக் கொடுக்க முடியும்.

**பின்வருவனவற்றைக் கணிக்குமாறு நீங்கள் கேட்கப்படுகிறீர்கள்.**

(a) இக்கம்பனியானது வரையறுக்கப்பட்ட **ABC** இனால் முன்வைக்கப்பட்ட விருப்ப அறிவிப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டுமா அல்லது உற்பத்தி **P** ஐ உற்பத்தி செய்ய வேண்டுமா என்பதை நிர்ணயிக்கவும். (03 புள்ளிகள்)

(b) வரையறுக்கப்பட்ட **ABC** நிறுவனத்தால் சாத்திய விலை அதிகரிப்பு செய்யப் படும்போது, உற்பத்தி **P** இற்காக வரையறுத்த **PQR** நிறுவனம் கொள்வனவு செய்ய விரும்புகின்ற ஆகக்கூடிய தொகையைக் கணிக்குக. (03 புள்ளிகள்)

(c) விடை (a) ஐ அடையும்போது நீங்கள் கவனத்திற்கொள்ள வேண்டிய மூன்று (03) மேலதிக தகவல்களைப் பட்டியலிடுக. (03 புள்ளிகள்)

(மொத்தம் 19 புள்ளிகள்)

**03.** (A) பாதீட்டுக் குழுவில் (budget Committee) பாதீட்டு அலுவலரின் (Budget Officer) பணிகள் எவை ? (03 புள்ளிகள்)

(B) பின்வரும் தகவலானது வரையறுக்கப்பட்ட **Z** நிறுவனத்தின் ஆண்டுப் பாதீட்டிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட 2012 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டுக்குரியது.

(1) உத்தேசிக்கப்பட்ட விற்பனைகள் :

| **மாதம்** | **அலகுகள்** | **அலகொன்றின் விலை (ரூ.)** |
|---|---|---|
| ஜனவரி | 38 | 225,000 |
| பெப்ரவரி | 41 | 226,000 |
| மார்ச் | 39 | 227,000 |

(2) அலகொன்றிற்கான மாறும் உற்பத்திக் கிரயம் பின்வருமாறு :

| | ரூ. |
|---|---|
| நேரடிப் பொருட்கள் | 65,000 |
| நேரடி உழைப்பு | 35,000 |
| மாறும் மேந்தலை | 45,000 |

(3) மாதம் ஒன்றுக்கான நிலையான உற்பத்தி மேந்தலை ரூ.2,000,000/- ஆகும். இது சொத்துக்கள் மீதான தேய்மானம் ரூ.500,000/- ஐ உள்ளடக்குகிறது. நிலையான உற்பத்தி மேந்தலை அதே மாதத்தில் செலுத்தப்படல் வேண்டும்.

(4) 2011 டிசம்பர் 31 இல் உள்ளவாறு கடன் கொடுத்தோரின் தீர்க்கப்படாத நிலுவையானது ரூ. 1,800,000/- ஆகும். இது 2011 டிசம்பர் மாதத்தில் செய்யப்பட்ட கொள்வனவுக்கானவையாகும். கம்பனியின் கொள்வனவுகளில் 60% அடுத்துவரும் மாதத்தில் தீர்க்கப்பட வேண்டியதான கடன் அடிப்படைமீது வழங்கப்பட்டுள்ளது.

(5) நேரடி உழைப்பும் மாறும் மேந்தலையும் அதே மாதத்தில் செலுத்தப்பட்டன.

(6) 2012 ஜனவரி 01 இல் உள்ளவாறு வங்கி மேலதிகப்பற்று (overdraft balance) ரூ.1,800,000/- ஆகும்.

(7) விற்பனைகளின் 40% கடன் அடிப்படை மீதானது. அடுத்துவரும் மாதத்தில் அவை தீர்க்கப்பட வேண்டும். 2011 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வேறு எதுவித வருமதியாளர்களும் இல்லை.

(8) கம்பனி 2012 ஜனவரி மாதத்தில் ரூ.6,000,000 இற்கான வங்கிக் கடன் ஒன்றை பெற்றுக்கொள்ளத் திட்டமிட்டது. இக்கடனானது 2012 பெப்ரவரி மாதத்தில் இருந்து ஆரம்பமாகின்ற 5 வருட காலமொன்றுக்கு மாதாந்த நிலையான தவணைகளில் (monthly fixed instalments) ஒவ்வொன்றும் ரூ.150,000 வீதம் தீர்க்கப்படல் வேண்டும்.

(9) உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் யாவும் அதே மாதத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்பதை எடுகோளாகக் கொள்க.

மாதாந்த அடிப்படையில், 2012 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டிற்கான காசுப் பாதீடொன்றை(cash budget) தயாரிக்குமாறு நீங்கள் கேட்கப்படுகிறீர்கள்.(10 புள்ளிகள்)
(மொத்தம் 13 புள்ளிகள்)

**04.** (A) செயன்முறைக் கிரயம் தொடர்பான பின்வரும் பதங்களைச் சுருக்கமாக விவரிக்குக.
(i) சாதாரண நட்டம்
ii) அசாதாரண நட்டம் (02 புள்ளிகள்)

(B) **குவாலிட்டி புரொடக்சன்** நிறுவனம், **அல்பா, பீற்றா, தீற்றா** என்னும் மூன்று மூலப்பொருட்களைப் பயன்படுத்தி சலவைத்தூள் ஒன்றைத் தயாரிக்கிறது. கம்பனியானது கீழே தரப்பட்டுள்ள விலைகளில் இம்மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு வழங்குநர்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டது.

***அல்பா*** - ஒரு கிலோகிராம் ரூ.192/- வீதம்
***பீற்றா*** - ஒரு கிலோகிராம் ரூ.120/- வீதம்
***தீற்றா*** - ஒரு கிலோகிராம் ரூ.96/- வீதம்

மாத ஆரம்பத்தில் புத்துருவாக்கும் வேலை (work-in-Progress) இருக்காததோடு நவம்பர் மாதத்தின்போது செயன்முறைக்கு உள்ளீடு செய்யப்பட்ட மூலப்பொருட்கள் பின்வருமாறு :

**அல்பா** - 3,200 கிலோகிராம்

**பீற்றா** - 4,800 கிலோகிராம்

**தீற்றா** - 9,600 கிலோகிராம்

கம்பனியானது மாதமொன்றுக்கு 24 மணித்தியாலம் வேலை செய்வதோடு ஒரு தொழிலாளிக்கு நாளொன்றுக்கு ரூ.941 வீதம் கொடுப்பனவு செய்கிறது. நவம்பர் மாதத்தில் செயன்முறையின்மீது வேலை செய்திட 40 தொழிலாளர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டனர். உற்பத்தி மேந்தலைகள் உழைப்புக் கிரயத்தின் 50% அடிப்படை மீது அறவீடு செய்யப்பட்டன. வெளியீடு 13,760 கிலோகிராமாக இருந்ததோடு செயன்முறையில் எதுவித நட்டங்களும் இல்லையென்பதை நீங்கள் எடுகோளாகக் கொள்ளவும்.

மாத முடிவில் புத்துருவாக்க வேலை அளவு பின்வருமாறு :

- பொருட்கள் 100%
- உழைப்பும் மேந்தலைகளும - உருப்படிகளில் ¼ பங்கு 60% பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
  மிகுதி 25% மட்டுமே பூர்த்தி செய்யப் பட்டுள்ளன.

**பின்வருவனவற்றைச் செய்யுமாறு நீங்கள் கேட்கப்படுகிறீர்கள்.**

(a) உற்பத்திக் கிரய மதிப்பீட்டு கூற்று (Production cost evaluation statement)

(b) செயன்முறைக் கணக்கு (Process Account) (13 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**05.** **விம்பிள்டன் ஸ்போட்ஸ் நிறுவனம் ரெனிஸ் ரெக்கெற்றுகள்** (Tennis Rackets) தயாரிக்கப் பயன்படுத்துகின்ற உயர்தரமான துணைப்பொருளினைத் தயாரிக்கிறது. கம்பனியானது ஒரு நியம கிரயமிடல் முறைமையைப் (standard costing system) பயன்படுத்துகிறது. 2011 நவம்பரில் துணைப்பொருள் ஒன்று ரூ.178 விலையில் பாதீடு செய்யப்பட்ட உற்பத்தி / விற்பனைகளின் தொகை 19,000 ஆக இருந்தது. நியம கிரய அட்டை (standard cost card) பின்வருமாறு இருந்தது.

| | **ரூ.** |
|---|---:|
| மூலப்பொருட்கள் (ரூ.10 வீதம் 2 கன செ.மீ.) | 20 |
| உழைப்பு (மணித்தியாலத்திற்கு ரூ.24 வீதம் 3 மணித்தியாலங்கள்) | 72 |
| மாறும் மேந்தலை (உழைப்பு மணித்தியாலத்திற்கு ரூ.8/- வீதம்) | 24 |
| நிலையான மேந்தலை (உழைப்பு மணித்தியாலத்திற்கு ரூ.6/- வீதம்) | 18 |
| **மொத்தக் கிரயம்** | **134** |

2011 நவம்பர் மாதத்தில் ரூ.392,000 கிரயத்தில் 40,000 கனவளவு சென்ரிமீற்றர் மூலப்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு 19,200 துணைப்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. காலத்தின் தொடக்கத்தின்போதும் முடிவின்போதும் எவ்வித மூலப்பொருட்களின் மீதியும் வைக்கப்படவில்லை. தொழிலாளர்களுக்கு 62,000 மணித்தியாலங்களுக்காக மொத்தம் ரூ.1,388,000 செலுத்தப்பட்டது. ஆனால் உண்மையில் 61,500 மணித்தியாலங்கள் மட்டுமே அவர்கள் வேலை செய்தனர். மாறும் மேந்தலைகளாக ரூ.576,000 உள்ளாக்கப்பட்டது. மெய்க் கிரயமானது (actual cost) ரூ.361,000 ஆக இருக்கையில் இக்காலப்பகுதிக்கான பாதீடு செய்யப்பட்ட நிலையான மேந்தலை ரூ.342,000 ஆக இருந்தது.

விற்பனைகள் மட்டங்களைப் பாதுகாத்திட விற்பனை விலை ரூ.130 இற்கு குறைக்கப்பட்டது. எனினும் 18,000 துணைப் பொருட்களையே விற்க முடிந்தது.

**நீங்கள் பின்வரும் முரண்களைக்** (variances) **கணிக்குமாறு கேட்கப்படுகிறீர்கள்.**

(a) விற்பனைகள் விலையும் தொகையும் (sales price and volume)

(b) நேரடிப் பொருட்கள் விலையும் பயன்பாடும் (Direct material price and usage)

(c) நேரடி உழைப்பு வீதம், வினைத்திறன் மற்றும் வீண் நேரம் (Direct labour rate, efficiency and idle time)

(d) மாறும் மேந்தலைச் செலவினம் மற்றும் வினைத்திறன் (Variable overhead expenditure and efficiency)

(e) நிலையான மேந்தலைச் செலவினம், தொகையும் வினைத்திறனும் (Fixed overhead expenditure, Volume and Efficiency)

(14 புள்ளிகள்)

## பகுதி B
## வியாபார நிதியியல்
## Business Finance (25 புள்ளிகள்)

**06.** (A) மூலதனக் கிரயத்தைக் கணிப்பிடுகையில் பயன்படுத்தப்படும் பங்கிலாப விருத்தி மாதிரி (Dividend Growth model) இன் வரையறைகள் **இரண்டினைப்** பட்டியலிடுக.
(02 புள்ளிகள்)

(B) **Rupee PLC** இன் பின்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன.

| | **ரூ.'000** |
|---|---|
| குறிக்கப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் (பங்கொன்று ரூ.10/- வீதம்) | 100,000 |
| 15% தொகுதிக் கடன்கள் (5 ஆண்டுகளில் முதிர்ச்சி) | 25,000 |

- சாதாரண பங்கொன்றின் நடைமுறைச் சந்தை விலை ரூ.25 ஆகும். கடந்த ஆண்டில் கம்பனி பங்கொன்றுக்கு ரூ.2 வீதம் பங்கிலாபத்தைச் செலுத்தியது. இது ஆண்டுதோறும் 5% ஆல் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டது.
- ரூ.100 தொகுதிக் கடன் சந்தையில் ரூ.95 இற்கு விற்கப்பட்டது.
- வரிவிதிப்பைப் புறக்கணிக்க.

**பின்வருவனவற்றைக் கணிக்குமாறு நீங்கள் கேட்கப்படுகிறீர்கள்.**

(a) உரிமையாண்மைக் கிரயம் (Cost of Equity) (02 புள்ளிகள்)

(b) கடன் முதலின் கிரயம் (Cost of Debt) (03 புள்ளிகள்)

(c) சந்தைப் பெறுமதி மீதான மூலதனத்தின் எடையேற்றிய சராசரிக் கிரயம் (Weighted average cost of capital base on market value) (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**07.** **Chatni Food Products** நிறுவனம் சந்தையில் 5 ஆண்டுகள் நின்றுபிடிக்குமென எதிர்பார்க்கப்பட்ட புதிய கொள்கலனில் அடைக்கப்பட்ட உணவு உருப்படியை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடுகிறது. இச் செயற்றிட்டத்திற்காக பின்வரும் உத்தேச மதிப்பீடுகள் முகாமைக் கணக்காளரினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

புதிய கொள்கலனில் அடைக்கப்பட்ட உணவுச் செயல்திட்டம்
*(எல்லா இலக்கங்களும் ரூ.'000 இல் தரப்பட்டுள்ளன)*

| **ஆண்டு →** | **1** | **2** | **3** | **4** | **5** |
|---|---|---|---|---|---|
| **வருமானம் :**<br>விற்பனைகள் | 700 | 980 | 1,064 | 1,148 | 1,064 |
| **செலவினங்கள் :** | | | | | |
| மூலப் பொருட்கள் | 107 | 150 | 180 | 210 | 180 |
| உழைப்பு | 214 | 300 | 360 | 420 | 360 |
| உற்பத்தி மேந்தலைகள் | 100 | 200 | 200 | 250 | 250 |
| ஏனைய நேரடிச் செலவுகள் | 90 | 80 | 70 | 60 | 50 |
| தேய்மானம் | 180 | 180 | 180 | 180 | 180 |

(1) கம்பனி புதிய இயந்திரங்கள் மீது ரூ.900,000/- ஐ முதலீடு செய்ய எதிர்பார்க்கிறது. இது உடனடியாகச் செலுத்தப்பட வேண்டிய தொகையாகும்.

(2) எஞ்சிய பெறுமதி (residual value) இல்லாமல் 5 ஆண்டுகளுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தப்பட முடியும்.

(3) உற்பத்தி மேந்தலைகளின் 40% மானது தலைமை அலுவலகத்தில் இறுக்கப்பட்ட பொதுக் கிரயங்களின் ஒதுக்கீட்டை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ஏனைய 60%, புதிய உற்பத்திக்கான படிப்பெருக்கமான கிரயமாகும்.

(4) கம்பனியின் மூலதனக் கிரயம் 12%.

(5) கம்பனியானது கடந்த ஆண்டில் இந்த உற்பத்தி மீது செயல் சாத்திய ஆய்வொன்றை (feasibility study) மேற்கொண்டது. செயல் சாத்திய ஆய்வுக்கான செலவு ரூ.25,000/-. இது ஆண்டு 1 இன் ஏனைய நேரடிச் செலவுகளில் உள்ளடக்கியுள்ளது.

(6) வரிவிதிப்பைப் புறக்கணிக்க.

**பின்வருவனவற்றைக் கணிக்குமாறு நீங்கள் கேட்கப்படுகிறீர்கள்**

(a) ஆண்டுகள் 1 இலிருந்து 5 வரையுள்ள தேறிய காசுப்பாய்ச்சல்களை கணிக்க (06 புள்ளிகள்)

(b) தேறிய இற்றைப் பெறுமதி (Net Present Value) ஐக் கணித்து கம்பனி புதிய கொள்கலனில் அடைக்கப்பட்ட உணவுத் தயாரிப்பை மேற்கொள்ள வேண்டுமா என்பதைத் தீர்மானிக்குக. (03 புள்ளிகள்)

(c) மீளளித்தல் காலத்தைக் கணிப்பிடுக.(pay-back period) (03 புள்ளிகள்)

(d) ஒரு செயல்திட்ட மதிப்பீட்டு நியதியாக ளள(as a project evaluation criterion) மீளளித்தல் காலத்தின் பின்னடைவுகள் எவை ? (03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள)

12% இல் கழிவு செய்தல் காரணி விபரம் வருமாறு :

| ஆண்டு | கழிவு செய்தல் காரணி |
|---|---|
| 1 | .893 |
| 2 | .797 |
| 3 | .712 |
| 4 | .636 |
| 5 | .567 |
| 6 | .507 |

- o0o -